சார்பு நீதிமன்றம், மேட்டுப்பாளையம்

முன்னிலை : திரு.K. பழனிவேல், பி.எல்.,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்

2026 ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 11 ஆம் நாள் புதன்கிழமை

(திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் மாசித் திங்கள் 27 ஆம் நாள்)

COMMERCIAL ORIGINAL SUIT No. 21/2024

CNR.No. TNCB190006882024

கனரா வங்கி
மேட்டுப்பாளையம் கிளை,
வங்கிக்காக அதன் கிளை மேலாளர் ... வாதி

-இடையே-

1. கிருஷ்ணமூர்த்தி
2. வி.துரைசாமி .... பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு . எம்.ரவி,அவர்கள் முன்னிலையாகியும் , பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும் வாதி தரப்பு வாதத்தைக் கேட்டும் இறுதியாக இன்று இந்நீதி மன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

01. இந்த வழக்கானது பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு 10.03.2024 ம் தேதி முடிய ரூ.3,75,452/- கடன் பாக்கித் தொகைக்கு 11.50 சதவீதம் வருட வட்டியுடன் செலுத்த வேண்டியும் மேலும் வாதிவங்கிக்கு பிரதிவாதிகள் செலவுத் தொகையுடன் கொடுக்க உத்தரவிடவேண்டுமாய் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**02. வழக்குரையின் சுருக்கம் :-**

இந்த வழக்கானது 1ம் பிரதிவாதியின் M.C.A. மூன்று வருட பட்ட மேற்படிப்பிற்கான கல்வி கடன் வேண்டி வாதி வங்கியை அணுகி கடந்த 25.08.2010 ம் தேதியன்று

விண்ணப்பித்தார். வாதி வங்கியிடம் பிரதிவாதி ரூ .1,35,000/- கடனை பெற்றுள்ளார். அதற்கு ஆதரவாக போனாபைடு சர்டிபிகேட் ஐ 12.07.2010 ம் தேதியன்று ஏற்படுத்தி கொடுத்தார். மேற்படி கடன் தொகையை 60 மாத கால தவணை மூலம் திருப்பி செலுத்துவதாகவும் அவ்வாறு செலுத்த தவறினால் 2 சதவீதம் கூடுதல் வட்டி தருவதாகவும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். மேலும் வங்கிக்கு ஆதரவாக ஒப்புகை படிவங்களை 11.06.2014, 15.05.2017, 07.05.2020 மற்றும் 10.04.2023 ஆகிய தேதிகளில் ஏற்படுத்திக்கொடுத்தார்.. அதன் பின்னர் பிரதிவாதிகளிடம் கடன் தவணைகளை செலுத்துமாறு வாதி வங்கி பிரதிவாதிகளுக்கு 19.03.2024 ம் தேதியன்று ஒரு அறிவிப்பை அனுப்பினார் அந்த அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிவிட்டார்கள் . ஆகவே 10.03.2024 தேதி முடிய 3,75,452/- க்கு 11.50 சதவீத வட்டியுடன் செலுத்தக்கோரி வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதிவாதிகளை 27.01.2026 ம் தேதி அழைத்தும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததாலும் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டுள்ளார்.

வாதி தரப்பில் வா.சா. 1 ஆக விசாரிக்கப்பட்டும் சான்றாவணங்கள் வா.சா. ஆ 1 முதல் வா.சா. ஆ.13 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

03. தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை என்னவென்றால் இந்த வழக்கு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

04. தீர்வு:

வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதி தரப்பு சாட்சிய சான்றாவணங்களை அனுசரித்து வாதியின் வழக்கை அனுமதிக்கும்படி வாதுரை செய்தார்.

வாதி தரப்பு வழக்கை நிரூபிக்கும் மூலமாக வாதி வங்கி மேலாளர் வா.சா,1 ஆக இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்திருக்கிறார். வா.சா.1 சாட்சிய சங்கதி என்பது கடந்த கடந்த 25.08.2010 ம் தேதியன்று விண்ணப்பித்ததாகவும் வாதி வங்கியிடம் பிரதிவாதி ரூ.1,35,000/- கடனை பெற்றுள்ளதாகவும் அதற்கு ஆதரவாக போனாபைடு சர்டிபிகேட் ஐ 12.07.2010 ம் தேதியன்று ஏற்படுத்தி கொடுத்ததாகவும் கடன் தொகையை 60 மாத கால தவணை மூலம் திருப்பி செலுத்துவதாகவும் அவ்வாறு செலுத்த தவறினால் 2 சதவீதம்

கூடுதல் வட்டி தருவதாகவும் ஒப்புக்கொண்டுள்ளதாகவும் வங்கிக்கு ஆதரவாக ஒப்புகை படிவங்களை11.06.2014, 15.05.2017, 07.05.2020 மற்றும் 10.04.2023 ஆகிய தேதிகளில் ஏற்படுத்திக்கொடுத்துள்ளதாகவும் பிரதிவாதிகளிடம் கடன் தவணைகளை செலுத்துமாறு வாதி வங்கி பிரதிவாதிகளுக்கு 19.03.2024 ம் தேதியன்று ஒரு அறிவிப்பை அனுப்பியதாகவும் அந்த அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி வா.சா. 01 ன் சாட்சியமும் அதனை உறுதிப்படுத்தும் விதமாக வா.சா.ஆ. 01 முதல் வா.சா.ஆ.13 ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி சாட்சிய சான்றாவணங்களில் இருந்து வாதிவங்கிக்கு கடன் தொகையை செலுத்த வேண்டிய கடப்பாடு கொண்ட பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி தன் தரப்பு ஆட்சேபனையை தெரிவிக்கவில்லை என்பதால் வழக்குரை சங்கதிகளிலிருந்து பிரதிவாதிகள் உட்கிடையாக ஒப்புக்கொண்டுள்ளார் என்பது மட்டுமில்லாமல் வாதிவங்கி தன் தரப்பு வழக்கை சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளார் என்றும் இந்நீதிமன்றம் முடிவிற்கு வந்து வாதி வங்கியின் வழக்கை அனுமதிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

05. முடிவில் வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட்டு வாதிக்கு பிரதிவாதிகள் பாக்கி கடன்தொகை ரூ. 3,75,452/- மற்றும் ரூ.1,35,000/-க்கு வழக்கு தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை ஆண்டுக்கு 9 சதவீதம் வட்டியும் பின்னிட்டு தொகை வசூலாகும் நாள் வரை 6 சதவீதம் பின் வட்டியும் வழக்கு செலவுத் தொகையுடன் கொடுக்க வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் தீர்ப்புரை பகரப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 11 ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/-K.Palanivel,
சார்பு நீதிபதி,
மேட்டுப்பாளையம்,

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 25.08.2010 | கடன் விண்ணப்பம் | அசல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.2 | 25.08.2010 | கடன் அனுமதி கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.3 | 12.07.2010 | போனாபைடு சர்டிபிகேட் | அசல் |
| வா.சா.ஆ.4 | 25.08.2010 | கல்வி கடன் ஒப்பந்த பத்திரம் | அசல் |
| வா.சா.ஆ.5 | 11.06.2014 | கடன் ஒப்புகை படிவம் | அசல் |
| வா.சா.ஆ.6 | 15.05.2017 | கடன் ஒப்புகை படிவம் | அசல் |
| வா.சா.ஆ.7 | 07.05.2020 | கடன் ஒப்புகை படிவம் | அசல் |
| வா.சா.ஆ.8 | 10.04.2023 | கடன் ஒப்புகை படிவம் | அசல் |
| வா.சா.ஆ.9 | 19.03.2024 | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.10 | 21.03.2024 | 1-ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுக்கொள்ளாமல் திருப்பபட்ட அஞ்சலக உறை | அசல் |
| வா.சா.ஆ.11 | 21.03.2024 | 2-ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பபட்ட அஞ்சலக உறை | அசல் |
| வா.சா.ஆ.12 | | கணிணி கணக்கு பட்டியல் | அசல் |
| வா.சா.ஆ.13 | 24.09.2024 | Non starter report | அசல் |

**சாட்சிகள் பட்டியல்**

**வாதி தரப்பில்** | **பிரதிவாதிகள் தரப்பில்**

வா.சா.1. முகமது சிகாப் (மேலாளர்) | --இல்லை--

.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

மேட்டுப்பாளையம்.